பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**17 06 2026** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரான்ஸ் நாட்டின் ஏவியன் நகரில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்-ஐ சந்தித்துப் பேச உள்ளார்.

2. யமுனை நதியின் குறுக்கே கிஷாவ் பல்நோக்கு அணைதிட்டத்தை செயல்படுத்த உத்தரப்பிரதேசம், ஹரியானா உள்ளிட்ட 6 மாநிலங்களுக்கு இடையே ஒருமித்த கருத்து எட்டப்பட்டுள்ளது.

3. நீட் மறுதேர்வு நெருங்கி வரும் சூழலில், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மோசடி கும்பல்களிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு தேசிய தேர்வு முகமை அறிவுறுத்தியுள்ளது.

4. எபோலா வைரசைக் கட்டுப்படுத்த ஆப்பிரிக்கா எடுக்கும் முயற்சிகளுக்கு முழு ஆதரவு அளிக்கப்படும் என்று இந்தியா கூறியுள்ளது.

5. உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று நெதர்லாந்தை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரான்ஸ் நாட்டின் ஏவியன் நகரில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்-ஐ சந்தித்து பேச உள்ளார்.

இந்த மாநாட்டில் இந்தியாவும் பங்கேற்றுள்ள நிலையில் இரு தலைவர்களுக்கிடையே நடைபெற உள்ள இந்த சந்திப்பு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் வாஷிங்டனில் இரு தலைவர்களும் சந்தித்துப் பேசிய பின்னர் முதல் முறையாக இப்போது சந்திக்கிறார்கள்.

பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது பரஸ்பரம் நலன் சார்ந்த ஆசிய மற்றும் சர்வதேச முக்கியப் பிரச்சினைகள் குறித்து இருவரும் விரிவாக ஆலோசனை நடத்த உள்ளனர்.

தற்போதைய உலகளாவிய சூழலில் சிக்கலான பிரச்சினைகளுக்கு சர்வதேச சமூகம் இந்தியாவை முக்கிய நாடாக கருதுவதால், சர்வதேச விவகாரங்களில் இந்தியாவின் பங்களிப்பு மற்றம் ராஜதந்திர

நடவடிக்கைகள் சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக நேற்று **G7** உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெற்ற சிறப்பு அமர்வில் உரையாற்றிய பிரதமர், சர்வதேச அளவில் சூரிய மின்சக்தியை அதிகரிப்பதற்காக இந்தியா ஏற்படுத்தியுள்ள கூட்டணி போன்ற நம்பிக்கை மிகுந்த ஒத்துழைப்பை அதிகரிப்பது அவசியம் என்று கூறினார்.

உயிரி எரிபொருள், பேரிடர் மீட்பில் ஒத்துழைப்பு போன்ற சர்வதேச கூட்டு செயல்பாடுகளையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுபோன்ற நடவடிக்கைகளை உருவாக்குவதன் மூலம் உலக நாடுகளிடையே நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

உலகமே ஒரு குடும்பம் என்ற தத்துவமே இந்தியாவின் சர்வதேச கூட்டணிகளுக்கு அடித்தளம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இன்று பிரதமர் ஐரோப்பிய ஒன்றிய கவுன்சில் தலைவர் திரு. அண்டனியோ கோஸ்டா, ஐரோப்பிய ஆணைய தலைவர் திரு. **Von Der Leyen,** ஜெர்மன் சான்ஸ்லர் திரு. **Friebrich Merz** ஆகியோரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுகள் நடத்த உள்ளார்.

<<<<>>>>

பிரான்ஸ் நாட்டில் நடைபெற்று வரும் ஜி7 உச்சிமாநாட்டில், உலகளாவிய சுகாதாரம் மற்றும் மேம்பாட்டிற்கான கூட்டு முயற்சிகளை ஜி7 நாடுகள் அறிவித்துள்ளன.

இதில் இந்தியா உள்ளிட்ட கூட்டாளி நாடுகளும் இணைந்து செயல்பட உள்ளன.

காங்கோ மற்றும் உகாண்டாவில் மீண்டும் பரவும் எபோலாவைத் தடுக்க, நோய்த்தொற்றைக் கண்டறிதல், எல்லைக் கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ள இந்தியா, எகிப்து உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

மேலும், இதற்கான தடுப்பூசி மற்றும் சிகிச்சை முறைகளை மேம்படுத்தவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

புற்றுநோயைத் தடுப்பது, ஆரம்பத்திலேயே கண்டறிவது மற்றும் தரமான சிகிச்சையை உறுதி செய்வது ஆகியவற்றில் கவனம் செலுத்த இந்தியா, பிரேசில் போன்ற நாடுகளுடன் இணைந்து செயல்பட ஜி7 நாடுகள் முடிவு செய்துள்ளன.

புற்றுநோய் ஆராய்ச்சியில் நவீன தொழில்நுட்பங்களை சரியாகப் பயன்படுத்தவும் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வளரும் நாடுகளின் நிலையான மற்றும் வலுவான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க, சர்வதேச அளவில் நிதி மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பைத் தொடர ஜி7 நாடுகள் உறுதிபூண்டுள்ளன.

இந்த முன்னெடுப்புகள், உலக நாடுகளுக்கிடையிலான ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்திற்கான கூட்டு முயற்சியாக அமையும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

யமுனை நதியின் குறுக்கே கிஷாவ் பல்நோக்கு அணைதிட்டத்தை செயல்படுத்த உத்தரப்பிரதேசம், ஹரியானா உள்ளிட்ட 6 மாநிலங்களுக்கு இடையே ஒருமித்த கருத்து எட்டப்பட்டுள்ளது.

புதுதில்லியில் நேற்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இந்த திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்த த்தில் கையெழுத்திட உத்தரப்பிரதேசம், ஹரியானா, ராஜஸ்தான், ஹிமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், தில்லி ஆகிய மாநிலங்கள் முன்வந்துள்ளன.

ஒப்பந்தம் கையெழுத்தான உடன் இந்த திட்டம் மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும்.

இந்த திட்டத்திற்கான நிதியில் 90 சதவீத த்தை மத்திய அரசு மானியமாக வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள 10 சதவீத தொகையை 6 மாநில அரசுகள் பகிர்ந்துகொள்ளும் என்று இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் மின் உற்பத்தி தொடர்பான செலவுகளை ஹிமாச்சலப்பிரதேச அரசு ஏற்கும் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

நீட் மறுதேர்வு நெருங்கி வரும் சூழலில், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மோசடி கும்பல்களிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு தேசிய தேர்வு முகமை அறிவுறுத்தியுள்ளது.

டெலிகிராம் செயலியில் இயங்கும் சில மோசடி கும்பல்கள், தங்களிடம் மறுதேர்வுக்கான வினாத்தாள் இருப்பதாகக் கூறி மாணவர்களிடம் 14 ஆயிரம் ரூபாய் முதல் 25 ஆயிரம் ரூபாய் வரை பணம் கேட்டு மோசடியில் ஈடுபட்டு வருகின்றன.

இதுபோன்ற போலியான வாக்குறுதிகளை நம்பி யாரும் ஏமாற வேண்டாம் என்று தேசிய தேர்வு முகமை கூறியுள்ளது.

மறுதேர்வு வினாத்தாள் கசிந்தது என்ற செய்தியில் எந்த உண்மையும் இல்லை என்றும், தேர்வு மிகவும் பாதுகாப்பான

முறையில் நடைபெறும் என்றும் அந்த அமைப்பு உறுதிபடக் கூறியுள்ளது.

தேர்வு தொடர்பான அதிகாரப்பூர்வ தகவல்களுக்கு அதிகாரப்பூர்வ இணையதளத்தை மட்டுமே மாணவர்கள் அணுக வேண்டும் என்றும் தேசிய தேர்வு முகமை கூறியுள்ளது.

<<<<>>>>

ஹைதராபாத் அருகே உள்ள சம்ஷாபாத் நகர் உலகத்தரம் வாய்ந்த புல்லட் ரயில் மையமாக மாற்றப்படும் என்று தெலங்கானா மாநில முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி கூறியுள்ளார்.

ஹைதராபாதில் நேற்று இதற்கான செயல் திட்டங்களை அறிவித்த அவர், ஹைதராபத்-பெங்களூரு இடையே அமைக்கப்பட உள்ள அதிவேக ரயில் பாதையில் சம்ஷாபாத் பகுதியை மையப்படுத்தி நவீன உள்கட்டமைப்புகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் நல்லமலா வனப்பகுதியில் உள்ள மன்னனூர் மற்றும் சோமசீலா ஆகிய இடங்களுக்கு அருகே ரயில் நிலையங்களை அமைக்குமாறும் அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

வாராங்கல் விமான நிலையத்தை பாரம்பரிய பெருமைகளுடன் அமைக்க வேண்டும் என்றும் திரு. ரேவந்த் ரெட்டி கூறினார்.

<<<<>>>>

புதுச்சேரியில் காங்கிரஸ் - தவெக கூட்டணி தொடர்வதாக அம்மாநில காங்கிரஸ் தலைவர் திரு. வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தட்டான்சாவடி இடைத்தேர்தலில் த.வெ.க. போட்டியிட்டால் காங்கிரஸ் ஆதரிக்கும் என்று கூறினார்.

த.வெ.க.-வை திமுக குறைத்து மதிப்பிட்டதுதான் தமிழகத்திலும், புதுச்சேரியிலும் தோல்விக்கு காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலின்போது கூட்டணிக்கு திமுக தலைமை வகித்த தால் தோல்விக்கும் அக்கட்சியே பொறுப்பு என்றும் திரு. வைத்திலிங்கம் தெரிவித்தார்.

<<<<>>>>

மத்திய-மாநில அரசுகளின் வளர்ச்சித் திட்டங்களை கடைக்கோடி மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் ஊடகங்கள் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்று பத்திரிகை தகவல் அலுவலக தென்மண்டல தலைமை இயக்குநர் திரு. பழனிசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

சேலம் மாவட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கு நேற்று நடத்தப்பட்ட பயிலரங்கில் பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

**(Voice Byte — Palanisamy — 37 Sec)**

இந்த நிகழ்ச்சியில் பேசிய சேலம் மாவட்ட ஆட்சியர் திரு. இளம் பகவத், மக்களுக்கும் — அரசுக்கும் இடையே ஒரு பாலமாக ஊடகங்கள் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

**(Voice Byte — Ilam Bagavath — 31 Sec)**

<<<<>>>>

எபோலா வைரசைக் கட்டுப்படுத்த ஆப்பிரிக்க நாடுகள் எடுக்கும் முயற்சிகளுக்கு முழு ஆதரவு அளிக்கப்படும் என்று இந்தியா கூறியுள்ளது.

இந்த வைரசைக் கட்டுப்படுத்த நேற்று ஆப்பிரிக்க நாடுகளின் தலைவர்கள் மற்றும் அந்நாட்டுடன் தொடர்புடைய பிற நாடுகளின் சுகாதாரத்துறை அமைச்சர்கள் மாநாடு காணொலி வாயிலாக நடைபெற்றது.

இதில் பேசிய மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா, எபோலா வைரசைக் கட்டுப்படுத்த ஆப்பிரிக்கா எடுக்கும்

முயற்சிகளுக்கு இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்று உறுதியளித்தார்.

இதன் ஒரு பகுதியாக இந்தியா **10** பில்லியன் டாலர் நிதியுதவியை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே **45** டன் மருத்துவப் பொருட்கள் ஆப்பிரிக்கா நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் திர. நட்டா கூறினார்.

<<<<>>>>

உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று நெதர்லாந்தை எதிர்கொள்கிறது.

லீட்ஸ் நகரில் நடைபெற உள்ள இப்போட்டி இன்று இரவு **7** மணிக்கு தொடங்குகிறது.

------------

இந்தியா - ஆஃப்கனிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

இந்தப் போட்டி பிற்பகல் மணி **1.30**க்கு லக்னோவில் தொடங்குகிறது.

மொத்தமுள்ள **3** போட்டிகளில் முதல் போட்டியில் இந்தியா வெற்றி பெற்று **1-0** என்ற புள்ளிக் கணக்கில் முன்னிலையில் உள்ளது.

**<<<<The End>>>>**